2. தகவல் கோரல்.

(அ) வினாக்கள் எடுத்துக்கொள்வது.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, இன்றைக்குரிய அஜண்டாவிலே கேள்வி நேரம் என்று போடப்பட்டுள்ளது. ஆனால் எந்தவிதமான கேள்விகளும் எங்களுக்கு அனுப்பி வைக்கப்படவில்லை, கேள்விகள் பற்றிய எந்தவித ஏற்பாடும் இல்லை. ஆகவே இதற்கு என்ன காரணம் என்பதை தலைவர் அவர்கள் தெரிவித்தால் நல்லது. அதுமட்டுமல்ல. நான் பல கேள்விகளைச் சட்டமன்றத்திற்கு அனுப்பி இருக்கிறேன். அது குறித்து. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கெனவே அனுபவம் பெற்றவர்கள் கேள்விகளை அனுப்பி இருக்கிறார்கள். ஆனால் அவற்றுக்குரிய விடைகள் எல்லாம் வந்து சேரவில்லை. வந்து சேர்ந்தபிறகு அவற்றுக்குரிய விடைகள் அவையிலே வைக்கப்படும். வினாக்கள் கொடுக்க 42 நாட்களுக்குள் விடை தரலாம் என்று விதியிலே இருக்கின்றது. ஆகவே விடைகள் எதுவும் இன்னும் வந்து சேரவில்லை. இன்றைக்கு வினாக்கள் விடைகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, 42 நாட்கள் என்பது ஆர்டினரி கேள்விகளுக்குத்தான். ஆனால் ஷார்ட் நோட்டீஸ் கொஸ்டின் பல கொடுக்கப் பட்டிருக்கின்றன. ஆகவே அவற்றையாவது எடுத்துக்கொள்கின்ற வகையில் தலைவரவர்கள் ஏற்பாடு செய்யவேண்டும். ஷார்ட் நோட்டீஸ் கொஸ்டின் களைப் பொறுத்தவரையில் 7 நாட்கள் என்று இருப்பது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குறுகியகால வினாவைப் பொறுத்த வரையில் 7 நாட்கள் என்று இருக்கிறது. விடைகள் வந்து சேரவில்லை. வந்து சேர்ந்தவுடனே அவையிலே எடுத்துக்கொள்ளப்படும். ஆகவே 7 நாட் கள் என்று விதி இருந்தாலும் விடைகள் கிடைத்துவிட்டால் சீக்கிரமாகவே எடுத்துக்கொள்கின்ற வகையிலே ஏற்பாடு செய்கிறேன். பாரளுமன்ற விதி களை கூடியவரையில் சட்டசபையிலே பின்பற்றுவதற்கு முயற்சிக்கப்படும்.

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, வினாக்களுக்கு விடை தரு வதைப் பொறுத்தவரையில் 42 நாட்கள் என்பது விதியிலே இருக்கின்றது. ஆனால் குறுகியகால வினாவுக்கு 42 நாட்களுக்கு உள்ளேயே கொடுக்கலாம். 42 நாள்தான் என்று சொல்லி குறுகியகால வினாவையும் தள்ளி வைத்து விட்டால் சட்டமன்றக் கூட்டத்தொடர் முடிந்துவிடக்கூடும். ஆகவே வினாக் களுக்குரிய விடைகள் கிடைக்காமல் போய்விடும்.

1980 ஜூன் 26]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதியிலே 42 நாட்கள் என்று இருக்கின்றது. இருந்தாலும் அந்தக் கால அளவைக் குறைப்பதற்குரிய ஏற்பாடுகள் பற்றி பரிசிலிக்கலாம். ஆகவே திரு. உமாநாத் அவர்களுக்கு நான் இப்போது சொன்ன மாதிரி வினாக்களுக்குரிய விடைகளை எவ்வளவு விரைவிலே வாங்க முடியுமோ அவ்வளவு விரைவிலே வாங்கி பேரவை முன் கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்ய முயற்சி எடுப்பேன்.

(ஆ) உறுப்பினர் விடுதியில் உறுப்பினர்களுக்கு அறைகள் ஒதுக்குதல்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, சட்டமன்ற விடுதியைப் பொறுத்தவரையில் இன்னும் பல உறுப்பினர்களுக்கு அறையே வழங்கப்படவில்லை என்பதும் அதேமாதிரி டெலிஃபோன் வசதி போதவில்லை என்பதும் பெரிய போராட்டமாகவே நடந்துகொண்டிருக்கிறது. ஆகவே அடிஷனல் ஆக ஒரு போர்டு போட்டு குறைந்தபட்சம் சட்டமன்றம் நடக்கக்கூடிய காலத்திலாவது சட்டமன்ற உறுப்பினர்களுக்கு டெலிஃபோன் வசதி கிடைக்கக்கூடிய அளவிலே ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொல்வது அவருடைய வீட்டிற்கா ; ஹாஸ்டலுக்கா ?

திரு. ரா. கிருஷ்ணன் : Hostel க்கு

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, இந்த தங்கும் அறை சம்பந்தமாக இங்கே இருக்கக் கூடிய அனைத்து அங்கத்தினர்களுடைய அந்தஸ்தை பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு உங்கள் உதவியை வேண்டுகிறேன். அசெம்பிளி ஆரம்பித்த உடனேயே, எங்கள் எல்லோரையும் வரச்சொல்லி அறிக்கை அனுப்பப்படுகிறது. சட்டப்படி எங்களுக்கு இலவசமாகத் தங்குவதற்கு வசதி பண்ணித் தரவேண்டியது டிபார்ட்மெண்டினுடைய கடமை. நாங்கள் எல்லோரும் வந்த பிறகு, ஒரு பகுதியினருக்கு தங்குவதற்கு ஏற்பாடு செய்வது, ஒரு பகுதியினருக்கு இல்லை என்று சொல்லிவிடுவதால், அவர்கள் தெருவில் போய் தங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டு விடுகிறது. பிறகு அவர்களாகவே வாடகைக்கு அறைகள் ஓட்டலிலே ஏற்பாடு செய்து கொள்கிறார்கள். எனக்குத் தெரிந்த தகவல்படி இன்னும் 25, 26 பேர்களுக்கு ரூம் வசதி செய்து